Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 23 | [05-06-93] | சனிக்கிழமை | ஓசை 107

Y.M.C.A

## ஆண்டுதோறும் 30 இலட்சம் மக்கள் உலகம் முழுவதும் புகைத்தலால் பலி

புகை பிடிப்பதினால் உலகில் வருடமொன்றிற்கு 30இலட்சம் பேர் இறக்கின்றனர். 2000 ஆண்டாகும்போது இது 70இலட்சமாக அதிகரிக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை செய்துள்ளது. இலங்கையிலும் தற்போது புகைத்தல் பழக்கம் அதிகரித்து வருகிறது. 1992 ம் ஆண்டில் மாத்திரம் சுமார் 1500கோடி ரூபா பெறுமதியான சிகரட்டுகள் புகைக்கப்பட்டுள்ளன. இப் புகைத்தலைத் தடுக்க மூன்றாம் உலக நாடுகள் துரித நடவடிக்கையை எடுக்கவேண்டும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. மேற்படி ஸ்தாபன புள்ளி விபரங்களின்படி தற்போது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் புகைப் பழக்கம் குறைந்து வருகிறது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் அதிகரித்து வருகிறது. கடந்த 31-ம் திகதி உலகம் முழுவதும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் கொண்டாடப்பட்டது. (4ஆம் பக்கம் பார்க்க)

## —பிலிப்பைன்ஸ், மலேசியா ஆயர்கள் உட்பட—

# வெளிநாட்டு நல்லெண்ண தூதுக்குழு இவ்வாரம் யாழ்ப்பாணம் வருகின்றது

## புலிகளுடன் சந்தித்துப் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

பிலிப்பைன்ஸ், மலேசியா ஆயர்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நல்லெண்ணத் தூதுக்குழு இவ்வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளது. இத் தூதுக்குழுவில் தென்கிழக்கு, தெற்கு ஆசியாவைச் சேர்ந்த கிறிஸ்தவ ஆயர்களும், குருமார்களும், புத்தி ஜீவிகளும் உள்ளடங்குகின்றனர். யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருக்கும் இவர்கள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து சமாதான நல்லெண்ண சூழ்நிலை ஒன்றை உருவாக்குவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

சமயத் தலைவர்களும், மதக் குழுக்களும் மற்றும் புத்திஜீவிகளும் அடங்கிய சமாதானத் தூதுக்குழு ஒன்று இம் மாதம் கொழும்பு வரவுள்ளது. இக் குழுவினர் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இச்சமாதானத் தூதுக்குழுவில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த வண. சோமாச்சை குசலிகிற்றோ, பிலிப்பைன்ஸ் ஆயர் மேதகு ஜூவாஸ் டி டொயஸ் பியூமிலஸ், மலேசிய ஆயர் மேதகு செல்வநாயகம், பிலிப்பைன்சைச்சேர்ந்த வண. இரவியோ கோர்டஸ் கியோ. வட-இந்தியப் பேராசிரியர் அஸ்கர் அலி எஞ்சினியர், புருணையைச் சேர்ந்த திருமதி கரோலின்ஸ்பயர்ஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் சர்வமதத் தலைவர்களையும்,, வடக்குக் கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சமாதானத்தில்நாட்டமுள்ள அமைப்புளையும் சந்தித்துப் பேசுவார்கள் எனத் தெரியவருகிறது.

ஆசிய ஆயர்கள் மாநாட்டின் ஏற்பாட்டின் பேரில், சிறிலங்கா கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் ஆதரவுடன் இக்குழு அதன் சமாதான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது மற்றும்மனித அபிவிருத்திக்கான ஆசியஒத்துழைப்பு அமைப்புப்சிறிலங்கா சமூக - பொருளாதார அபிவிருத்தி மையமும் இக்குழுவின் விஜயத்துக்கான ஒத்துழைப்பை வழங்குகிறது.

இக் குழுவினர் திருக்கோணமலை, மூதூர், மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, அனுராதபுரம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வர்.

### மீட்புநிதி சேகரிப்பு

நாளை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9 00மணிதொடக்கம் 10.00மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நேரத்தில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### மாத இறுதியில் விசாரணை

வடமேல் மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றின் ஆளுநர்களுக்கும், முதலமைச்சர் [4ஆம் பக்கம் பார்க்க]

## போலி பத்திரிகை வெளியீடு அரசாங்கத்தின் சதி

### பத்திரிகையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

'லக்திவ' பத்திரிகையில் இருந்து வெளியேறிய ஆசிரியர் குழு வெளியிடவிருந்த பத்திரிசையின் பெயரில் வேறொரு பத்திரிகை வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சுனில் மாதவ, வினி எத்திகொட ஆகியோர் 'சத்திய அட' (சத்தியத்தின்குரல்) எனும் சிங்களப் பத்திரிகையை வெளியிட இருந்தனர். இப்பத்திரிகை வெளிவர முன்னர் எங்கிருந்தோ அதே பெயரில் பத்திரிகை ஒன்று விற்பனைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான ''ராஜாளிய'' வெளிவரவிருந்த தருணத்தில் இதேபெயரில்போலிப் பத்திரிகையொன்று கட்சித் தலைவர்களைத் தாக்கி வெளி (4ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

1993ஆம் ஆண்டிற்கான க. பொ. த. (உயர்தர) தமிழ் மொழி மற்றும் இந்து நாகரிகம் ஆகிய பாடங்களிற்கான முன்னோடிப் பரீட்சை இம் மாத முடிவில் நடாத்தப்படவுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்கள் பாடசாலைகளூடாக எதிர் வரும் 10ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும். அதற்கு பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது [4ஆம் பக்கம் பார்க்க]

## புதியஅரசியல்கட்சியமைக்க ஹேமா பிரேமதாசா திட்டம்

### ஐ. தே. க. மீண்டும் பிளவுறலாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரண... தலைமையில் தென்னிலங்கையில் புதிய கட்சியொன்று வெளியிட்டுள்ளது.

இக் கட்சிக்கு 'சுசரித புர...

## இந்தியா - சிறிலங்கா கூட்டு ராணுவ நடவடிக்கை

### இந்திய அதிகாரி மறுப்பு

(சென்னை)

சிறிலங்கா இராணுவத்...

இருந்து வெளியேறிய ஆசிரியர் குழு வெளியிடவிருந்த பத்திரிசையின் பெயரில் வேறொரு பத்திரிகை வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த சுனில் மாதவ, வினி எத்திகொட ஆகியோர் 'சத்திய அட' (சத்தியத்தின்குரல்) எனும் சிங்களப் பத்திரிகையை வெளியிட இருந்தனர். இப்பத் திரிகை ஒன்று விற்பனைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உத்தியோக பூர்வ பத்திரிகையான "ராஜாளிய" வெளிவரவிருந்த தருணத்தில் இதேபெயரில்போலிப் பத்திரிகையொன்று கட்சித் தலைவர்களைத் தாக்கி வெளி

(4ஆம் பக்கம் பார்க்க)

வுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்கள் பாடசாலைகளூடாக எதிர்வரும் 10ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும். அதற்கு பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

[4ஆம் பக்கம் பார்க்க]

# புதியஅரசியல்கட்சியமைக்க ஹேமா பிரேமதாசா திட்டம்

## ஐ. தே. க. மீண்டும் பிளவுறலாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின்மனைவி ஹேமா பிரேமதாசாவின் தலைமையில் தென்னிலங்கையில் புதிய கட்சியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இக் கட்சிக்கு 'சுசரித புரவெசி பெரமுன' (சுசரித மக்கள் முன்னணி) என பெயரிடப்பட்டுள்ளது எனவும் நேற்றைய 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரேமதாசாவினால் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படும் சுசரித்த இயக்கத்திற்கு தற்போது கொழும்பு மேயர் ரட்ணசிறி ராஜபக்ச தலைமை வகிக்கிறார். இவ் இயக்கத்தின் மூலமே பிரேமதாசா அரசியல் செல்வாக்கைப் பெற்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இச் சுசரித்த இயக்கத்தின் பேரிலேயே கட்சி ஆரம்

(4ஆம் பக்கம் பார்க்க)

பிரேமாவின் புலனாய்வுத் தலைவர் மீது

## வழக்குத் தாக்கல் செய்ய அரசு ஆலோசனை

முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் இரகசிய புலனாய்வு குழுத்தலைவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யஅரசாங்கம் ஆலோசித்து வருகிறது. இதன் மூலம் அப் புலனாய்வுக் குழுவின் முழுநடவடிக்கை விபரத்தையும் அறியமுடியும் எனவும் இது குறித்து சட்டவல்லுனர்களும் நீதியமைச்சும் ஆராய்ந்து வருவதாகவும் 'யுக்திய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதே வேளை சிறிலங்கா அரச படைகளுக்கென கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள், வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பனவே இப் புலனாய்வுக் குழுவினருக்கு வழங்கப்பட்டதாகவும் மேலும் அரச படையினரின் சம்பளத்திற்கென ஒதுக்கப்பட்ட பணத்திலேயே இவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு அரசநியமனம் வழங்கப்பட்டதால் இவர்கள் தற்போது வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமா கொலை புலனாய்வு

## தமிழக பொலிசின் உதவி சிறிலங்கா நாடுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொலையை புலனாய்வு செய்வதற்கு தமிழ்நாடு பொலிசின் உதவியை சிறிலங்கா பொலிசார் நாடியுள்ளனர். ராஜீவ் காந்தி கொலையும், பிரேமதாசா கொலையும்ஒரே பாணியில் நடத்தப்பட்டிருப்பதாகவும் இதனால் பிரேமதாசா கொலை விசாரணையில் தமிழக காவல்துறையின் பங்களிப்பு உதவிகரமாக இருக்கும் எனவும் சிறிலங்கா பொலிஸ் கருதுகிறது.

இத்தகவல்களை பிரதி பொலிஸ்மாஅதிபர் அமரசேன ராஜபக்ஸ தெரிவித்தார்.

வடகிழக்கு தவிர்ந்த பகுதியில்

# அவசரகால விதிகளை நீக்க அரசு ஆலோசனையாம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதி நீங்கலாக ஏனையபகுதிகளில் அவசரகாலச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக அரசாங்கம்தீவிரமாக ஆலோசனை செய்துவருவதாக சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேசவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

சென்றவாரம் உயர்ஸ்தானிகர்களுக்கு வழங்கப்பட்ட விருந்துபசாரம் ஒன்றிலேயே மேற்படி கருத்தை இவர்வெளியிட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்குக் கிழக்கில் மட்டும் அவசரகாலச்சட்டத்தை அமுல் செய்வது தொடர்பாக சிறிலங்கா ஆராய்வதாகவும் ஏனைய பகுதிகளில் நீக்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இங்குஅமைதி நிலவுவதாகக்காட்டுவதே அரசாங்கத்தின் நோக்கம்என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயர்களும், குருமார்களும், புத்தி ஜீவிகளும் உள்ளடங்குகின்றனர். யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருக்கும் இவர்கள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து சமாதான நல்லெண்ண சூழ்நிலை ஒன்றை உருவாக்குவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

சமயத் தலைவர்களும்,மதக் குழுக்களும் மற்றும் புத்திஜீவிகளும் அடங்கிய சமாதானத் தூதுக்குழு ஒன்று இம் மாதம் கொழும்பு வரவுள்ளது. இக் குழுவினர் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இச்சமாதானத் தூதுக்குழுவில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த வண. சோமாச்சை குசலிகிற்றோ, பிலிப்பைன்ஸ் ஆயர் மேதகு ஜூவாஸ் டி டொயஸ் பியூமிலஸ், மலேசிய ஆயர் மேதகு செல்வநாயகம், பிலிப்பைன்சைச்சேர்ந்த வண. இரஸியோ கோர்டஸ் கியோ. வட-இந்தியப் பேராசிரியர் அஸ்கர் அலி எஞ்சினியர், புருணையைச் சேர்ந்த திருமதி கரோலின்ஸ் பயர்ஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் சர்வமதத் தலைவர்களையும்,, வடக்குக் கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சமாதானத்தில்நாட்டமுள்ளஅமைப்புளையும் சந்தித்துப் பேசுவார்கள் எனத் தெரியவருகிறது.

ஆசிய ஆயர்கள் மாநாட்டின் ஏற்பாட்டின் பேரில், சிறிலங்கா கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் ஆதரவுடன் இக்குழு அதன் சமாதான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது மற்றும்மனித அபிவிருத்திக்கான ஆசியஒத்துழைப்பு அமைப்புப்சிறிலங்கா சமூக - பொருளாதார அபிவிருத்தி மையமும் இக்குழுவின் விஜயத்துக்கான ஒத்துழைப்பை வழங்குகிறது.

இக் குழுவினர் திருக்கோணமலை, மூதூர், மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை, அனுராதபுரம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வர்.

புனர்நிர்மாண, புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள மனிதநேய அமைப்புக்களையும், ஏனைய மதத்தலைவர்களையும் சந்தித்துப் பேசி சாதாரண மக்கள் மத்தியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா - சிறிலங்கா கூட்டு ராணுவ நடவடிக்கை

## இந்திய அதிகாரி மறுப்பு

(சென்னை)

சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கும் திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை என இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய இராணுவ உதவியுடன் சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் யோசனை குறித்து பரிசீலித்து வருவதாக சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இத்தகைய கோரிக்கை எதனையும் சிறிலங்கா அரசு முன்வைக்கவில்லை என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய இராணுவத்தை மீள அழைக்குமாறு சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவிடம் கையெழுத்திடாத கடிதம் மூலம் சில பிரமுகர்கள் கோரியிருப்பதாக இந்து தினசரியில் செய்தி வெளிவந்துள்ளமையை அடுத்தே சிங்கள பத்திரிகைகள் இவ்வாறு செய்திகளை வெளியிடத் தொடங்கியுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

# மொகைதீனை சந்தேகநபர் எவ்வாறு பயன்படுத்தினார்?

[கொழும்பு]

வடபகுதியிலிருந்து கொழும்பிற்கு ஒருவருடங்களிற்கு முன் சென்ற பிரேமதாசாவை கொலை செய்ததாக கூறப்படும் வீரகுமார் என்பவர் பிரேமதாசாவின் தனிப்பட்ட இல்லமாகிய சுசரித்த இல்லத்திற்கு அருகே தங்கியிருந்ததாகவும் அவர் படிப்படியாக சுசரித்த இல்ல வேலையாட்களைப் பழக்கப்படுத்திக் கொண்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பிரதிப் பொலிஸ் அதிகாரி அமரசேன ராஜபக்ச நேற்று முன் தினம் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; குறிப்பாக பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

வதிவிட வேளாண்மைப் போட்டி -1993

## மாவட்ட மட்ட பரிசளிப்பு இன்று தென்மராட்சியில்

யாழ். மாவட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட 1993ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப்போட்டியில் மாவட்ட மட்டத்திலும், தென்மராட்சிக் கோட்ட, வட்ட மட்டங்களிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாசாலையில் இரவு 7.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ், மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக இணைப்பாளர் ந அருள் நேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## முன்னேறிவந்தராணுவம்மீது மன்னாரில் புலிகள் தாக்குதல்

[மன்னார்]

மன்னார் உயிலங்குளம் இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை முன்னேறிவந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய எறிகணைத் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை 7 மணியளவில் உயிலங்குளம் இராணுவ முகாமிலிருந்து 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கவச வாகனங்கள் சகிதம் முன்னேறிவந்தனர். 2 மைல் தொலைவிலிருக்கும் உயிர்த்த இராசன்குளம் நோக்கி வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் பலத்த எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர்.

பிற்பகல் 1-30 மணியளவில் அப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இவ் எறி

(4ஆம் பக்கம் பார்க்க)

# மேல்மாகாண தோல்வி; ரணிலே பொறுப்பு

## சிறிசேன கூரே குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலின் போது மேல் மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## "சுதந்திரப் பறவைகள்" ஆனி இதழ் வெளிவந்தது

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப்பறவைகள் பத்திரிகை ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது.

6000 விதவைகளின் அவலம், சுமைதாங்கும் வலுவான கரங்கள், விளக்கேற்றும் பெருமாட்டிகள் இருளில் வாடுகின்றனர் ஆகிய ஆக்கங்களும், பெண் ஒடுக்குமுறையின் மையம் என்ற ஆசிரிய தலையங்கத்தையும் மற்றும் சிறுகதை ஆகியவற்றையும்தாங்கி இப்பத்திரிகை வெளிவந்துள்ளது.

## வரி விளம்பரம்

### நிர்வாணம்

நிர்வாணம் சிறுகதைகள்: உடுவை தில்லை நடராசா: வெளியீடு: தாகம் கலை இலக்கியவட்டம் திருக்கோணமலை: விலை ரூபா 50/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்

(சி/6740)

### கார்கசற் ரேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து; பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

சி-6584)

### தவறிவிட்டது

4-6 93 அன்று ரொக்கப் பணம் கஸ்தூரியார் வீதிக்கும் நீராவியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(சி-6771)

### சைன் கல்வியகம்

பெண்களுக்கான மனையியல் கைத்திறன் டிப்ளோமா பயிற்சிகள் .05 06 .1993 புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. தையற்கலை, பூவேலை, கேக் ஐசிங் கைப்பணி, சமையற்கலை, கூந்தல் அலங்காரம். ஆறுமாத பயிற்சி முடிவில் சித்தியடைந்தவர்கட்கு Diploma in Economics Fine Arts சான்றிதழ் வழங்கப்படும் பருத்தித்துறை வீதி, கோப்பாய்

(சி-6761)

### பாரதிதாசன் கல்வி நிறுவனம்

[ஸ்ரான்லி வீதி, யாழ்.]

B. A., G. A. Q. தமிழ்
திரு. சி கணேசலிங்கம்
B A. (Hons)

ஆரம்பம்: 5-6-93

B A 2 — 3 மணி
G. A Q 12 — 1 மணி

கொக்குவில் மேற்கு,

### மஞ்சவனப்பதி ஆலயம்

மேற்படி ஆலயம் தொடர்பாக 31-05-93 திகதிய ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்தில் கடந்த 5 வருட காலமாக தர்மகர்த்தா சபையென யாப்பு எதுவுமின்றி தன்னிச்சையாக இயங்கி வந்த ஒரு குழுவினர்'' என்று விளம்பரப்படுத்தப்பட்டது தவறானது என்பதையும் மேற்படி தர்மகர்த்தா சபையானது TR 20 கோட்டு தீர்ப்புக்கு அமைய 1 6 88இல் தெரிவு செய்யப்பட்டது. இதன் ஆயுட்காலம் 31 5 93 வரையும் (5 வருடம்) என்பதை இத்தால் உபயகாரர்கள், வழிபடுவோர் ஆகியோருக்கு அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

இ. பொன்னம்பலம்
முன்னைநாள் தர்மகர்த்தாசபைத் தலைவர்

(5037)

உலக

### சூழல் பாதுகாப்பு தினம்

மரத்தை அழிப்பதன் மூலமே சூழல் மாசுபடுகின்றது. எனவே அனைத்து தமிழீழ மக்களும் மரத்தை நாட்டி பாதுகாத்து, வளர்த்து சூழலைப் பாதுகாப்போம்.

ஊர்காவற்றுறை ப.நோ கூ.சங்கம்.

[சி/6770]

### முக்கிய அறிவித்தல்

தரம்! நாணயம்! நம்பிக்கை! நிறைந்த

### புனிதா நகை மாளிகை

04. 06. 93 முதல்

239, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மாற்றம் செய்துள்ளோம். அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறியப்படுத்தவும்.

— உரிமையாளர்

(5024)

### சிறந்த புரதச்சத்து நிறைந்த சோயா பானத்தை தயாரிக்க வல்லது

## -சோயாரீன்-




இது கோப்பி போன்று பாலுடன் பாவிக்கக் கூடியது.

அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணா கோப்பிக்

### எமது புதிய வெளியீடுகள்

1] சிவகுமார் - பானுப்ரியா - கவுண்டமணி

**''பிறந்தவீடா புகுந்தவீடா''**

2] சத்யராஜ் – பானுப்ரியா

**''கட்டளை''**

3] சரத்பாபு – ராஜேஷ்

**''மகரஜோதி''**

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6763)

### 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழ்த் தாய்க்கு மகனானான்

03. 09. 1969

தமிழ் மண்ணுக்கு உரமானான்

05. 06. 1989

### லெப்டினன்ட் குட்டி

(துரைரத்தினம் சிவனேசன்)

தமிழீழ மீட்புக்கென்று தன்னை
முழுமையாக அர்ப்பணித்தவன் குட்டி

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை
எதிர்க்கவென்று அங்கங்கே
தங்கி விட்ட வேங்கைகளுள்
குட்டியும் ஒருவன்.

வாதரவத்தை, கட்டைக்காட்டில்
எதிர்பாராத நேரடி மோதல்.

தமிழன் தலை நிமிரத் தன்னைக் கொடுத்தான்.
தன்மானம் காத்தான்.

இந்தப் பச்சை மண்ணின் குருதி பட்டுத்
தமிழ் மண் சிலிர்த்தது

வீரன் மாவீரன் ஆனான்
எங்கள் மனதில் மலைபோல் உயர்ந்தான்.

UNIVERSITY OF JAFFNA

### TENDER NOTICE

Tenders are invited from contractors registered for civil Engineering works with University of Jaffna or ICTAD for improvements at Ramanathan Academy of Fine Arts. Maruthanamadam — Construction of temporary class room.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 7-6-93 — 10-6-93 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fees.

(a) Refundable — Rs. 2000/-
(b) Non-refundable — Rs. 200 /-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a. m. on 23-6-93

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR
University of Jaffna
P. O Box. 57,
Thirunelvely,
Jaffna.

(சி-6767)

### விற்பனைக்கு

நல்ல சுத்தமான. தரமான பதனிடப்பட்ட மாட்டிறைச்சி (வற்றல்) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

1) கொக்குவில் மொத்த விற்பனை நிலையம், கொக்குவில்.

2) உதயம் பல்பொருள் அங்காடி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/6769)

### நினைவு கூருகின்றோம் ... 1993-06-05

1974ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். கோப்பாயில் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது முதன்முதலாக சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய. தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான - சிவகுமாரன் [பொன்னுத்துரை சிவகுமாரன் - உரும்பராய் - யாழ் ]

1985ஆம் ஆண்டு திருமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 70 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ தவராசா தவேந்திரன் (ஏறாவூர் - மட்டு.]

திருமலையில் - தம்பலகமம், 13-ம் கட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 20 தமிழர்கள்.

பூசா தடுப்பு முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

யாழ் பருத்தித்துறை அல்வாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கை

சிகள் .05.06.1993 புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. தையற்கலை, பூவேலை, கேக் ஐசிங் கைப்பணி, சமையற்கலை, கூந்தல் அலங்காரம். ஆறுமாத பயிற்சி முடிவில் சித்தியடைந்தவர்கட்கு Diploma in Economics Fine Arts சான்றிதழ் வழங்கப்படும் பருத்தித்துறை வீதி, கோப்பாய்

(சி-6761)

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்

[ஸ்ரான்லி வீதி, யாழ்.]

B. A., G. A. Q. தமிழ்
திரு. சி கணேசலிங்கம்
B A. (Hons)

**ஆரம்பம்: 5-6-93**

B A 2 — 3 மணி
G. A Q 12 — 1 மணி
(யாழ் பேராதனை பல்கலைக் கழகம்)

★ திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மேலதிக வகுப்புகள் நடைபெறும்

(சி-6772)

## சோயா பானத்தை தயாரிக்க வல்லது

# -சோயாரீன்-




இது கோப்பி போன்று பாலுடன் பாவிக்கக் கூடியது.

அண்ணா கோப்பிக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா கோப்பிக் கடை**

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[சி/6764]

உ
ஸ்ரீ காமாக்ஷி அம்மன் துணை
ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மணே நம

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 24-ம் நாள் (06 06 1993) ஞாயிற்றுக் கிழமை காலை 6 40 மணி முதல் 8 16 மணி வரையிலான மூல நட்சத்திரமும் மிதுன லக்கினமும் அமிர்தசித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்.

| | |
|---|---|
| காலஞ்சென்ற திரு. செ இரத்தினசபாபதி இரத்தினமணி தம்பதிகளின் | திரு. க. செல்லத்துரை இராசேஸ்வரி தம்பதிகளின் |
| சிரேஷ்ட புதல்வன் திருநிறைச் செல்வன் | சிரேஷ்ட புதல்வி திருநிறைச் செல்வி |
| **அன்புதாசன்** (ராசன்) | **கலைச்செல்வி** (கவிதா) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில். அம்பாளின் அருளுடன் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும், தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மாலை 4 00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி இ. இரத்தினமணி | க. செல்லத்துரை தம்பதிகள் |
| (தாயார்) | திருமூர்த்தி (மூர்த்தி) |
| றஜீஸ் (ரஞ்சன்) | சகோதரர் |
| சகோதரர் | 25/8, அரசடி ஒழுங்கை, |
| பாதிரி கோவிலடி, | தட்டா தெரு, |
| கொக்குவில் கிழக்கு, | யாழ்ப்பாணம், |
| குளப்பிட்டி, | |
| யாழ்ப்பாணம். | |

(இருவீட்டார் அழைப்பு) (5023)

05. 06. 1989

# லெப்டினன்ட் குட்டி

(துரைரத்தினம் சிவனேசன்)

தமிழீழ மீட்புக்கென்று தன்னை
முழுமையாக அர்ப்பணித்தவன் குட்டி

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை
எதிர்க்கவென்று அங்கங்கே
தங்கி விட்ட வேங்கைகளுள்
குட்டியும் ஒருவன்.

வாதரவத்தை, கட்டைக்காட்டில்
எதிர்பாராத நேரடி மோதல்.

தமிழன் தலை நிமிரத் தன்னைக் கொடுத்தான்.
தன்மானம் காத்தான்.

இந்தப் பச்சை மண்ணின் குருதி பட்டுத்
தமிழ் மண் சிலிர்த்தது

வீரன் மாவீரன் ஆனான்
எங்கள் மனதில் மலைபோல் உயர்ந்தான்.

தமிழீழ மக்களின் விடிவு மிக அருகில்...
மிக அருகில்......


- குடும்பத்தினர்.

நவகிரி, புத்தூர். (5033)

விண்ணக வாழ்வின்

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின்
அரவணைப்பில்
22-12-1972



அரக்கன்
அழிப்பில்
05-06-1991

செல்வன்

# கனகசிங்கம் சத்தியமூர்த்தி

[கண்ணன்]

முன்னேற்றத்தின் வேகம்
உன்னை பத்தொன்பது வயதில்
உயர்தர மாணவனாக்கிய போது
உன் நடையில் வேகம்
உன் பார்வையில் வேகம்
உன் படிப்பில் வேகம் — இறுதியில்
உன் முடிவையும் வேகமாக்கிக்கொண்டாயோ
எம் அருமைக் கண்ணா!

உமது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உமது நினைவால் உள்ளம் உருகும்
குடும்பத்தினர்

D-7
கிளிநொச்சி. (5034)

# 1993-06-05

1974ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். கோப்பாயில் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது முதன்முதலாக சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய. தமிழீழ ஆயுதப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான -
**சிவகுமாரன்** [பொன்னுத்துரை சிவகுமாரன் - உரும்பராய் - யாழ் ]

1985ஆம் ஆண்டு திருமலை - மூதூர்ப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 70 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -
★ **தவராசா தவேந்திரன்** (ஏறாவூர் - மட்டு.]

திருமலையில் - தம்பலகமம், 13-ம் கட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 20 தமிழர்கள்.

பூசா தடுப்பு முகாமில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

யாழ் பருத்தித்துறை அல்வாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட 8 குழந்தைகள், 5 பெண்கள் உட்பட 22 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு கிளி - பரந்தனில் தேசவிரோத சக்திகளுடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**கோணேஸ்** [ஆறுமுகம் கோணேஸ்வரன் - புளியம்பொக்கணை - கிளிநொச்சி]

1989ஆம் ஆண்டு யாழ் - புத்தூர், கண்டிக்காட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய -
**கப்டன் நேரு** [செ. இளையப்பா ஜீவகுமார் - கதிரிப்பாய், அச்சுவேலி - யாழ் ]
**லெப். குட்டி** (துரைரட்ணம் சிவனேசன் - நவக்கிரி, புத்தூர் - யாழ்.)

இதே நடவடிக்கையின்போது இந்தியப் படையினரால் சுடப்பட்டும்' உயிரோடு எரிக்கப்பட்டும் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

யாழ். கொடிகாமம் வரணியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -
**லெப். சங்கிலி** [சங்கரப்பிள்ளை மகேந்திரலிங்கம் - மயிலியோடை, மயிலிட்டி வடக்கு - யாழ்.]
**2-ம் லெப். கர்ணன்** ( — கருணானந்தம் - அச்செழு, நீர்வேலி - யாழ்.)
**உமைநேசன் /சாம்** (பெனான்டோ அன்ரனிசாம் போல் - திலீபன் நகர், பழைய வாய்க்கால், மிருசுவில் - யாழ் )
**ஆசாத்** (பரீத் ஆசிர் - சிவன் கோவிலடி, சாவகச்சேரி- யாழ். )

யாழ் - சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
**பாலன்** [சின்னத்தம்பி கலாராஜன் - மட்டுவில்வடக்கு, சாவகச்சேரி - யாழ்.]

1991ஆம் ஆண்டு மட்டு - கொந்துறைப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் வந்தாறுமூலைச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தின் மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலின்போது அருகில் இரு வீடுகள் சேதமுற்றதில் கொல்லப்பட்ட ஜெயந்தி நகரைச் சேர்ந்த இளம் தாய், மகன் உட்பட 2 பேர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6766)

சிந்தனைக்கு

தன்னால் ஒன்றைச் செய்யமுடியாது என்று ஒருவன் எண்ணும் வரை, உண்மையில் அவனால் அதை சாதிக்க முடியாமலேயே போகும்.
- பெனிடிக்ட் ஸ்பினோஸா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## டி. பியின் தருமாற்றம்

அரசியல்வாதிகளில் குதர்க்கமாகப் பேசுபவர்களும் உண்டு. முரண்பாடாகக் கதைப்பவர்களும் உண்டு. இதனை சிலர் திட்டமிட்டுச் செய்வதுமுண்டு. சில அரசியல்வாதிகள் விளங்காமல் செய்வதுமுண்டு. இந்த வகைகளில் சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா எந்த வகையைச் சேர்ந்தவர்? ஏனெனில், அவரது கடந்த ஒரு மாத பதவிக்காலத்தில் இனப்பிரச்சினை குறித்த அறிவிப்புக்கள் அவ்வாறான கேள்வியையே எழ வைக்கின்றன.

கடந்த ஒரு மாத காலத்தில், இனப்பிரச்சினை குறித்த டி. பி. விஜயதுங்காவின் அறிவிப்புக்கள், அவரது குழப்பத்தையும், தடுமாற்றத்தையும் வெளிக்காட்டுபவையாக இருப்பதோடு, இனப்பிரச்சினை குறித்த பரிணாமத்தையும் அவர் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்று ஒரு வார காலத்தில், கண்டியில் பத்திரிகையாளர்களிடம் பேசிய டி. பி. விஜயதுங்கா ''வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும். தீர்விற்கான மார்க்கம் இது தான். ஆனால், அதற்கான வழி எது என்பதுதான் விளங்கவில்லை. பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை நடத்த யாராவது உதவுவார்களேயானால், அது ஒரு மகத்தான செயலாகும்'' என்றார்.

ஆனால், அடுத்த வாரத்தில், டி பி. விஜயதுங்கா 'புரண்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில், ''நான் இதனை - தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை - வித்தியாசமாகப் பார்க்கிறேன். இது ஓர் இனப்பிரச்சினையல்ல. இதுஒரு பயங்கரவாதப் பிரச்சினை'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இனப்பிரச்சினை குறித்து டி. பி. விஜயதுங்காவின் இம் முரண்பாடானது அப் 'புரண்ட்லைன்' பேட்டியில் தெளிவாகவே தெரிவதோடு ஜனாதிபதி விஜயதுங்காவைப் பேட்டி கண்ட என். ராம் தனது

# இலட்சிய வேங்கை தியாகி சிவகுமாரன்

''தன்னிலையிற் றாழாமை
தாழ்வுவரின்
வாழாமை தாங்கும் பண்
பால்
பொன்னிலையாள் மான
மெனும் பொற்கொடியைத்
தெய்வ மணம் புரிந்த
வீரா''

இவ்வாறு பண்டிதர் இளமுருகனாரின் பாடல் வரிகளில் தியாகி சிவகுமாரனின் அகப்புறவாழ்க்கை ஓவியமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பியல்புகள், பண்புகள்குடிகொண்ட தியாகி சிவகுமாரன் தமிழுக்காகத் தன்னுயிர் ஈய்ந்த தலைவர்களைத் தந்த கோப்பாய் தொகுதியில் உரும்பராய் நகரில் பொன்னுத்துரை-அன்னலட்சுமி தம்பதிகளுக்கு அரும் புதல்வனாக 26-08-1950-ல் தோன்றினான். பெற்றோரால் 'திரவியம்' என்று அழைக்கப்பட்டவன்; தமிழீழத்தின் திரவியமாகவே வாழ்ந்துகாட்டினான். வண்டமிழ்பாலை உண்டு தவழ்ந்தான்; வலிமையை இளமையில் உணர்த்தி வளர்ந்தான். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியவன்; 'தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசம்' என்று போர் முரசம் கொட்டி அரணாக நின்றான்.

பாராளுமன்றம், பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் என்ற கானல்நீரைப்பருகி சாய்வுநாற்காலி அரசியல் பேசிப்பேசி அத்தலைவர்களால் தமிழீழ மக்கள் ஏமாற்றப்பட்டவர்களாக வதைக்கப்படுவதைப் பொறுத்துக்கொள்ளாத இளந்தமிழ் உள்ளம் பொங்கியெழுந்தது. தரப்படுத்தலால் தமிழ் மாணவர் புறக்கணிக்கப்படுவதைத் தீவிரமாக எதிர்த்து ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தி தமிழ் மாணவர்களிடையே விழிப்புணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்தான். தமிழ்த் துரோகிகளையும் காட்டிக் கொடுப்பவர்களையும்ஒழித்துக்கட்ட முனைப்புடன் செயற்பட்டான். தன்னோடொத்தவர்களைக்கூட்டிச்செயற்பட்டதோடு, இரகசிய வகுப்புக்களும் நடாத்தி அரசியல் விழிப்புணர்ச்சியை இளம் உள்ளங்களில் பாய்ச்சினான். இவற்றினால் இருமுறை சிறைப்பட்ட அவன், அரச அரக்கக் கூலிப் படைகளினால் நையப்புடைக்கப்பட்டான். இதனால் அவன் துவண்டுவிடவில்லை. சிறைவாசம் புதிய சிந்தனைகளையும், போராட்டத்தில் உத்வேகத்தையும் அவனுக்குக் கொடுத்ததே தவிர சோர்வையோ, பயப்பிராந்தியையோ கொடுக்கவில்லை. ஆயுதப் போராட்டத்தைத் தவிர தமிழீழம் காண்பதற்கு



மாற்று மருந்தில்லை என்பதை நன்கு உணர்ந்திருந்தான். சிறைவாசத்தின்போதுகவிதை ஒன்று எழுதினான். அதில் காப்புப் பாடலின் ஈற்றடியிரண்டிலும்,

''துப்பாக்கி துணை
கொண்டு தமிழ்நாடு காண்
போர்க்குத்
தப்பாமல் தானுதவி தா''

என்பதாக நாட்டின் நிலைப்பாட்டைத் தெள்ளத்தெளிவாக எடுத்து விளம்பினான். ஆட்சியாளர் அவனது தலைக்கு விலை பேசினார்கள்.

வீரம், மானம், சிறந்தவழியில் நடக்கும் நடக்கை, தலைமைத்துவம், தலைமைக்குப் பணிதல் போன்ற படைவீரனுக்குரிய பண்புகள் அவனிடம் இருந்தன.

''செய்வானை நாடி வினை
நாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்''

என்ற வள்ளுவத்திற்கு வடிவமைத்துக் காட்டியவன் எத்தகைய துன்பம் வரினும் தமிழீழத் தாயகம் என்னும் இன்ப நிலையைக் காண்பதற்குத் துணிவாற்றி வினை காண்பானாகி நின்றவன்.

தமிழீழப் போராட்ட வரலாற்றில், தற்கொடையாளியாகத் தன்னுயிரை இம்மண்ணின் விடிவிற்காகமடித்த முதல் வீரன் சிவகுமாரன் என்பதை நாடறியும்.

த. கண்ணராசா

## கலைக்கப்பட்ட அரசுகளை மீண்டும் அமைக்குக

பாரதீய ஜனதா கோரிக்கை

(டில்லி)

ஆர். எஸ். எஸ். மீதான தடை இரத்து செய்யப்பட்டிருப்பதை பாரதீய ஜனதாக் கட்சி வரவேற்றுள்ளது. ஆர். எஸ். எஸ். அமைப்பு மீதான தடை நியாயமற்றது, அரசியல் நோக்குடையது என்பது இத்தீர்ப்பின் மூலம் தெரியவருகின்றது என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய அரசு இத்தீர்ப்பை பெருந்தன்மையாக ஏற்று ஆர். எஸ். எஸ். உடன் தொடர்பு இருப்பதாக கூறி கலைக்கப்பட்ட நான்கு பி. ஜே. பி. மாநில அரசுகளை மீண்டும் அமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் பி. ஜே. பி. கோரிக்கை விடுத்துள்ளது.

## சர்வதேச விமான நிலையம் பொலநறுவையில் அமையும்

[கொழும்பு]

சிறிலங்காவின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் வடமத்திய மாகாணத்தில் ஹிங்குராவ்கொடவில் அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்காவிமான நிலையத்தில் காலநிலை மோசமாக இருக்கும் காலங்களில் ஹிங்குராவ்கொட விமான நிலையத்திலிருந்தேசென்னைக்கான பயணிகள் விமான சேவை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பொலநறுவையிலிருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் அமையும் இந்த விமான நிலையத்தின் ஓடுபாதை 3,500 மீற்றர் நீளமானதாக இருக்கும்.

## 4000 பஸ்களுக்கு பணம்செலுத்துவது யார்?

அரச வட்டாரங்களில் சர்ச்சை

(கொழும்பு)

மக்கள் மயமாக்கப்பட்ட பஸ் டிப்போக்களிற்கு 4000 புதிய பஸ்களை கொள்வனவு செய்யும் பல மில்லியன் ரூபா ஒப்பந்தம் குறித்து புதிய சர்ச்சைகள் எழுந்துள்ளன. யார் இந்தபஸ்களுக்கு பணம்செலுத்துவது என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

கடந்த வருட ஒக்டோபரில் ஜனாதிபதி பிரேமதாசா அரசு இந்த பஸ்களை உள்ளூரில் மீளப்பொருத்த பல தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பிரேமதாசாவின 200 ஆடைத் தொழிற்சாலைத் திட்டம் குறித்தும் இப்போது சர்ச்சைகள் எழுந்துள்ளது தெரிந்ததே. இத்திட்டத்தில் பெருமளவு மோசடி, ஊழல் காணப்படுவதாக குற்றஞ் சாட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ஐ.ஐ.தே.மு உறுப்பினருக்கு

# எதிர்க்கட்சிகளை பழிவாங்க புலிகள் பிரச்சினை ஒரு சாட்டு

— டாக்டர் ராம்தாஸ்

(சென்னை)

தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க மத்திய அரசு விடுதலைப்புலிகளின் பிரச்சினையை ஒரு சாட்டாகப் பயன்படுத்தி வருவதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற இக்கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; காவிரிநதி நீர் பிரச்சினையின் நடுவர் மன்றத் தீர்ப்பையும் உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் கர்நாடக அரசும் மத்திய அரசும் அமுல் படுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

பொஸ்னியாவில்

## இராணுவத் தலையீடு நடத்த வளர்முக நாடுகள் கோரிக்கை

(ஜெனிவா)

இம் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்பாக பொஸ்னியாவில் இராணுவ ரீதியாக தலையீடு செய்யப்பட வேண்டும் என்றும், பொஸ்னியா முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை

விடப்பட்ட போதும் இது உத்தியோக பூர்வமாக அந்நாடுகளால் அறிமுகப் படுத்தப்படவில்லை. இந்தக் கோரிக்கை அங்கீகாரம் பெறும் என்று எதிர்பார்க்கப்படாத போதும் ஐ. நா. சபையில் வல்லரசு நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான வேறுபாடு அதிகரித்து வருவதை இது காட்டுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ள

## கம்போடிய அரசு கலைப்பு

20 வருடங்களின் பின் கம்போடியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தெரிவான புதிய அரசாங்கம் ஒரு நாளின் பின் நேற்றுகலைக்கப்பட்டது. இதற்கான அறிவிப்பை ஜனாதிபதி சிகானுக் நேற்று வெளியிட்டார். தேர்தல் தொடர்பாகஎதிர்க்கட்சியுடன் ஏற்பட்ட முறுகல் நிலையே

தில், கண்டியில் பத்திரிகையாளர்களிடம் பேசிய டி. பி. விஜயதுங்கா ''வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும். தீர்விற்கான மார்க்கம் இது தான். ஆனால், அதற்கான வழி எது என்பதுதான் விளங்கவில்லை. பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை நடத்த யாராவது உதவுவார்களேயானால், அது ஒரு மகத்தான செயலாகும்'' என்றார்.

ஆனால், அடுத்த வாரத்தில், டி பி. விஜயதுங்கா 'புரண்ட்லைன்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில், ''நான் இதனை - தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை - வித்தியாசமாகப் பார்க்கிறேன். இது ஓர் இனப்பிரச்சினையல்ல. இதுஒரு பயங்கரவாதப் பிரச்சினை'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இனப்பிரச்சினை குறித்து டி. பி. விஜயதுங்காவின் இம் முரண்பாடானது அப் 'புரண்ட்லைன்' பேட்டியில் தெளிவாகவே தெரிவதோடு ஜனாதிபதி விஜயதுங்காவைப் பேட்டி கண்ட என். ராம் தனது வழிக்கே அவரை இழுத்துச் சென்றுள்ளதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பேட்டியில் இனப்பிரச்சினை தொடர்பான பகுதியை என். ராம் தொடக்கிய போது, விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என தெரிவித்த டி.பி.விஜயதுங்கா ''ஓர் 'இராணுவக் கட்சியான' விடுதலைப் புலிகளுடன் நாம் இணைந்து செயற்பட விரும்புகிறோம். அது ஓர் இராணுவப் பாணியிலான கட்சி. அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவதாக இருந்தால், எமது கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது, விடுதலைப் புலிகள் ஓர் 'இராணுவக்கட்சி எனக் குறிப்பிட்டிருப்பினும் பிரச்சினைக்கு புலிகளுடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்திய டி. பி. விஜயதுங்கா அதே பேட்டியில் வேறோர் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் ''இது ஓர் இனப்பிரச்சினையல்ல. இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை... எனவே நாம் 'பயங்கரவாதத்தை' அழித்தொழிக்க வேண்டும், 'பயங்கரவாதிகளுக்கு' எந்த ஓர் இடமும் இல்லை என்ற உணர்வை அவர்களுக்கு நாம் ஏற்படுத்த வேண்டும்'' என முரண்பட்ட விதத்தில் பேசியுள்ளார்.

இவ்வாறாக முரண்பாடுகளை விஜயதுங்கா கொண்டுள்ளமையினாலேயே அவர் குறிப்பிட்டது போன்று அவரால் இனப்பிரச்சினைத் தீர்விற்கான மார்க்கத்தைக் கண்டுகொள்ள முடியவில்லை. இந்நிலை தொடருமானால் அவரால் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதென்பது சாத்தியமானதாகப் போவதில்லை.

உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு டி.பி. விஜயதுங்கா தீர்வுகாண வேண்டுமானால், முதலில் முரண்பட்ட கருத்துக்களை முரண்பட்ட தொனியில் பேசுவதை அவர் நிறுத்த வேண்டும். வடக்கு - கிழக்கில் இடம்பெறுவது ஒரு 'பயங்கரவாத பிரச்சினை' அல்ல. ஒரு தேசிய இனத்தின் விடுதலை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நிலையிலேயே இனப்பிரச்சினை கையாளப்பட வேண்டும். இதைவிடுத்து 'பயங்கரவாதம்' என்பதும் புலிகளின் தனிப்பட்ட பிரச்சினை என்பதும் ஒருபோதும் நன்மை பயக்கப் போவதில்லை.

கட்டுநாயக்காவிமான நிலையத்தில் காலநிலை மோசமாக இருக்கும் காலங்களில் ஹிங் விமான நிலையத்தின் ஓடு பாதை 3,500 மீற்றர் நீளமானதாக இருக்கும்.

## 4000 பஸ்களுக்கு பணம்செலுத்துவது யார்?

### அரச வட்டாரங்களில் சர்ச்சை

(கொழும்பு)

மக்கள் மயமாக்கப்பட்ட பஸ் டிப்போக்களிற்கு 4000 புதிய பஸ்களை கொள்வனவு செய்யும் பல மில்லியன் ரூபா ஒப்பந்தம் குறித்து புதிய சர்ச்சைகள் எழுந்துள்ளன. யார் இந்தபஸ்களுக்கு பணம்செலுத்துவது என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

கடந்த வருட ஒக்டோபரில் ஜனாதிபதி பிரேமதாசா அரசு இந்த பஸ்களை உள்ளூரில் மீளப்பொருத்த பல தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி பிரேமதாசாவின 200 ஆடைத் தொழிற்சாலைத் திட்டம் குறித்தும் இப்போது சர்ச்சைகள் எழுந்துள்ளது தெரிந்ததே. இத்திட்டத்தில் பெருமளவு மோசடி, ஊழல் காணப்படுவதாக குற்றஞ் சாட்டப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ஐ.ஐ.தே.மு உறுப்பினருக்கு பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

தென்மாகாண சபையின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றவரும் தற்போது ஐ.தே.க. விற்கு சார்பாக நடந்துகொள்கிறார் என எதிரணியினால் குற்றஞ் சாட்டப்படுபவருமான ரைட்டர் திலகசேகரவிற்குபொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இவர் மாகாண ஆளுநரிடம் தமக்கு கொலை பயமுறுத்தல் வருவதாகவும் பொலிஸ் பாதுகாப்பு தேவை என்றும் கோரியதையடுத்தே அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

### திருத்தம்

நேற்றைய வெள்ளி மஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட ''மேற்குலக சாத்தான்களும் எகிப்திய மதவாதமும்'' என்ற தலைப்பிலான பாலகுமாரன் எழுதிய கட்டுரையில் சில அச்சுத்தவறுகள் நேர்ந்து விட்டமைக்காக வருந்துகின்றோம்.

அக்கட்டுரையில் 'அரபு நாடுகளின் திகைப்பு' என்ற துணைத் தலைப்பின் கீழ் வரும் இரண்டாவது வசனத்தின் பிற்பகுதி ''சுனி மத அடிப்படை வாதம் தடுப்பாக பயன்படுத்தப் பட்டது'' என்றிருந்திருக்க வேண்டும்..

அதேபோல் 'மேற்குலகின் அச்சம்' என்ற தலையங்கத்தின் கீழ் வந்த பந்தியின் தொடக்க வசனம் ''எனவே இன்று மேற்குலகம் அதன் கூட்டாளிகளான சவுதி, குவெய்த் போன்ற பிற்போக்கு அரபுலக ஆட்சியாளர்கள் பெரிதும் அஞ்சுகின்றனர்'' என்றே வந்திருக்க வேண்டும்.

மற்றும் கட்டுரையில் அஸ்வான் நகரம் என இடம்பெற வேண்டியது அல்பாஸ் என இடம்பெற்று விட்டது.

தவறுகளைத் திருத்தி வாசித்துக் கொள்ளும்படி வாசகர்களிடம் வேண்டுகின்றோம்.

## அலவன்ஸ்

யாழ். கல்வித்திணைக்களத்திலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும், பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் 01-06-1993 தொடக்கப் படி ரூபா 860/- வழங்கப்பட வேண்டும் என யாழ். கல்வித்திணைக்களம் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான நிதி உதவியாளர்களுக்கும் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

இதன்படி முன்னர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு ரூபா 560/- படியாக வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கும் 01-06-1993 தொடக்கம் ரூபா 860/- வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(17)

### விசாரணை

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை தொடர்பாக விசாரணை மேற் கொண்டு வரும் இரகசிய பொலிசார் அவரின் பிரத்தியேக வாசஸ்தலமான சுச்சரித்த பகுதிக்கும் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரேமதாசா கொலையில் சந்தேகிக்கப்படும் நபரின் சுச்சரித்த பகுதி நடமாட்டத்தை கண்டறிவதே இந்த விசாரணையின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

(சென்னை)

தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க மத்திய அரசு விடுதலைப்புலிகளின் பிரச்சினையை ஒரு சாட்டாகப் பயன்படுத்தி வருவதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற இக் கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; காவிரிநதி நீர் பிரச்சினையின் நடுவர் மன்றத் தீர்ப்பையும் உச்சநீதிமன்றத் தீர்ப்பையும் கர்நாடக அரசும் மத்திய அரசும் அமுல் படுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

### பொஸ்னியாவில்

## இராணுவத் தலையீடு நடத்த வளர்முக நாடுகள் கோரிக்கை

(ஜெனிவா)

இம் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்பாக பொஸ்னியாவில் இராணுவ ரீதியாக தலையீடு செய்யப்பட வேண்டும் என்றும், பொஸ்னியா முஸ்லிம்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் அணி சேரா நாடுகள் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தக் கோரிக்கை அடங்கிய நகல்தீர்மானம் அங்கத்துவ நாடுகளிடையே சுற்றுக்கு விடப்பட்ட போதும் இது உத்தியோக பூர்வமாக அந்நாடுகளால் அறிமுகப் படுத்தப்படவில்லை. இந்தக் கோரிக்கை அங்கீகாரம் பெறும் என்று எதிர்பார்க்கப்படாத போதும் ஐ. நா. சபையில் வல்லரசு நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான வேறுபாடு அதிகரித்து வருவதை இது காட்டுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## கம்போடிய அரசு கலைப்பு

20 வருடங்களின் பின் கம்போடியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தெரிவான புதிய அரசாங்கம் ஒரு நாளின் பின் நேற்றுகலைக்கப்பட்டது. இதற்கான அறிவிப்பை ஜனாதிபதி சிகானுக் நேற்று வெளியிட்டார். தேர்தல் தொடர்பாகஎதிர்க்கட்சியுடன் ஏற்பட்ட முறுகல் நிலையே அரசு கலைக்கப்படக் காரணம் எனக் கூறப்படுகிறது.

### தமிழக அரசு செய்த

## ஊழல்களின் பட்டியல் இருவாரத்தில் ஆளுநரிடம்

### காங்கிரஸ் செயலர்

(சென்னை)

தமிழ் நாட்டி ஆளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினால் செய்யப்பட்ட ஊழல்கள் குறித்த பட்டியல் ஒன்று இன்னும் இரு வாரத்தில் தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டியிடம் தரப்படும் என்று தமிழக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் தண்டாயுதபாணி தெரிவித்தார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; கூட்டுறவுசங்கங்களுக்கு விரைவில்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும், தேர்தல் நடத்தப்படாமையால் அதிகாரிகளிடம் சிக்கி கூட்டுறவு நிர்வாகங்கள் சீர் குலைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## தவறுகளை திருத்தாவிடின் பாரிய விளைவுகள் ஏற்படும்

### காங்கிரஸ் அ. தி. மு. கவிற்கு எச்சரிக்கை

(சென்னை)

அ. தி. மு. கவின் தவறுகளை சுட்டிக்காட்டுவது காங்கிரஸ் கட்சியின் ஜனநாயகக் கடமை அதை உணர்ந்து அ. தி. மு. க தனது தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என காங்கிரஸ் பிரமுகர் ஜி கே. மூப்பனார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மதுரையில் செய்தியாளரிடம் பேசிய அவர் விடுதலைப் புலிகள் அண்மைக் காலமாக சிறைகளில் இருந்து தப்பிப்பது ஏன் எப்படி என தங்களுக்கு விளங்கவில்லை என்றும் கூறினார். சிறையிலிருந்து போராளிகள் தப்புவது தொடர்பாக மத்திய அரசு மீது அ. தி. மு. க குற்றஞ் சாட்டுவது முறையற்றது. சிறை பாதுகாப்பிற்கு தமிழக அரசே பொறுப்பு என்றும் தெரிவித்தார்.

## ஜனநாயக விரோதமாக தமிழக அரசு செயல்படுகிறது

### -சி.பி.ஐ. குற்றச்சாட்டு

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க. அரசு ஜனநாயக விரோதமாகச் செயற்படுகின்றது. என்று இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

இதே வேளை அரசியல் அமைப்பின் 35-வது பிரிவைப் பயன்படுத்தி மத்தியிலுள்ள காங்கிரஸ் கட்சி சதி செய்வதாகவும் இக் கட்சி குறை கூறியுள்ளது.

### கூட்டரசாங்கம் அமைப்பதில்லை

கம்போடியாவில் கூட்டரசாங்கம் நிறுவும் திட்டத்தை இளவரசர் நொரடாம் சிஹானூக் கைவிட்டிருப்பதாக அறிவித்துள்ளார். பிரதமர் ஹூன் ஜீன் தலைமையிலான கம்போடிய மக்கள் கட்சியையும், தமது மகன் நொரடாம் றெனாரிட்சிச்தலைமையிலான கம்போடிய றோயலிஸ்ட் கட்சியையும் இணைத்து கூட்டரசாங்கம் அமைக்கப் போவதாக முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

### தென்னாபிரிக்காவில் தேர்தல்

(ஜோகானஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் முதலாவது இனப்பாகுபாடற்ற தேர்தல்கள் நடத்துவதற்கான திகதிகள் குறித்தான தீர்மானம் ஒன்றை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் பல கட்சிப் பிரதிநிதிகள் நிறைவேற்றி யுள்ளனர்.

இந்த தீர்மானத்தின்படி அடுத்த ஆண்டு ஏப்ரல் 27ம் திகதியன்று தென்னாபிரிக்காவில் தேர்தல்களை நடத்துவதற்கு பரிந்துரை செய்யப்படவுள்ளது.

## கப்பல்தொடர்பாகஆட்சேபம்

(மாஸ்கோ)

கருங்கடல் யுத்தக்கப்பல்கள் சம்பந்தமாக எழுந்திருக்கும் அண்மைய சர்ச்சை காரணமாக உக்ரைன் ரஷ்யாவிடம் உத்தியோகபூர்வ ஆட்சேபனையை தெரிவித்துள்ளது.

ஈழநாதம்

# ஆர்.எஸ்.எஸ். மீதான தடை நீக்க நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

தீவிரவாதஇந்துமத அமைப்பான விஸ்வஹிந்து பரிஷத் மீதான தடை சரியானதே என்றும் ஆனால் ஆர். எஸ். எஸ். பஜ்ரந் தள் ஆகிய தீவிர இந்து அமைப்புகள் மீதான தடைகளை அகற்றுமாறும் நீதிபதி பஹாரிய தலைமையிலான விசாரணை மன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

இவ் அமைப்புகள் மீதான தடை அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் விதிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்த மூன்று தீவிரவாத இந்து அமைப்புகள் மீது இந்திய அரசு விதித்த தடை சரியானது தானா என்று விசாரிக்கஇந்த ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. விஸ்வஹிந்து பரிஷத் சட்ட விரோதமான அமைப்பு என்பதற்கு போதுமான ஆதாரம் உண்டு. ஆனால் ஆர் எஸ்.எஸ். மற்றும் பஜ்ரந் தள் ஆகியவை சட்டவிரோதமானவை என அறிவிக்க ஆதாரங்கள் இல்லை. எனவே இவற்றின் மீதான தடையை ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது என விசாரணைக்குழு தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி மத்திய அரசு ஆர் எஸ்.எஸ். மற்றும் பஜ்ரந் தள் அமைப்புகளை தடை செய்திருந்தது தெரிந்ததே.

## நுரையீரல் மாற்று சிகிச்சை பிரெஞ்சு வைத்தியர் புதுமை

(பாரிஸ்)

நுரையீரல் மாற்று சிகிச்சையில் பிரெஞ்சு வைத்தியர் ஒருவர் புதுமையை செய்திருக்கின்றார். இறந்துபோன ஆண் ஒருவரின் நுரையீரலை இரண்டாக பிரித்து ஒரு பெண்ணுக்கு சத்திர சிகிச்சை மூலம் இவர் பொருத்தியுள்ளார். ஒரே நுரையீரலை பிரித்து அப்பெண்ணுக்கு இரண்டு வழமையான நுரையீரல்களாக அவர் பொருத்தியிருப்பது சாதனையாக கருதப்படுகிறது.

இந்த உறுப்பு மாற்று சிகிச்சை நடந்து இரு வாரங்களாகின்றன. அடையாளம் காட்டப்படாத 40 வயது பெண் இப்போது தேறி ஆஸ்பத்திரியிலிருந்து வீடுதிரும்பி விட்டார். நுரையீரல் தானம் வழங்குவது குறைவாக இருக்கும் இக்காலத்தில் தாம் கண்டுபிடித்த இம்முறை குழந்தைகளுக்கு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என அந்த டாக்டர் தெரிவித்தார்.


**அரியாலை அமரகலா சனசமூக நிலையம்**

**44வது ஆண்டு நிறைவு விழா**

இடம் : அரியாலை மத்திய விளையாட்டரங்கு
காலம் : 5-6-93 சனிக்கிழமை (இன்று) 7.00 மணி

நிலைய உறுப்பினர்கள் வழங்கும்
"ஒலமிடும் சீதனங்கள்" எனும் தாளலயம்
பரத நாட்டியம், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுடன்
சிறப்பு நிகழ்ச்சி: V. V. வைரமுத்துவின்
வசந்தகான சபாவினர் வழங்கும்
"சத்தியவான் சாவித்திரி"
நிலைய மாணவிகள் வழங்கும்
"அரிச்சந்திர மயான காண்டம்"


### வருடாந்த பரிசளிப்பு விழா

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை கல்லூரி அதிபர் திரு எஸ். செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ. அருளானந்தம், தமிழீழ கல்விப் பேரவையைச் சேர்ந்ததிரு.க. அருள்மாஸ்டர், வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்லூரி மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

### அபிவிருத்தி கருத்தரங்கு

வல்வை புனரமைப்பு குழுவினரின் வல்வை நகரசபை பிரதேச அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய் காலை 10 மணிக்கு வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

### சுகாதார வார நடவடிக்கை

சுகாதார வார நடவடிக்கைகள் யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் இன்று சனிக்

### 'நுணுக்கம்' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தொழிநுட்பவியலாளர் சங்கத்தின் வெளியீடான "நுணுக்கம்" சஞ்சிகை வெளியீட்டு விழா இம்மாதம் 9ஆம் திகதி பிற்பகல் 4.15 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

### சான்றிதழ் வழங்கல்

1992 ஏப்ரல் மாதம் நடைபெற்ற தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு (நாளை) ஞாயிறு காலை 9.30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வைபவத்தில் சான்றிதழ் வழங்கப்படும்.

யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தில் பயிற்சி பெற்ற, பெற்றுக் கொண்டிருக்கும் சகல ஆசிரியர்களும் சமூகம் அளிக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

## பொறித்துவக்கு வெடித்து பொலிஸ் காயம்

(வவுனியா)

வவுனியா பொலிஸ் காவல் நிலையம் ஒன்றின் முன்பாக தற்பாதுகாப்புக்காக பொருத்தப்பட்டிருந்த பொறித் துவக்கை அதே நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் மிதித்ததால் அந்த கான்ஸ்டபிள் கடுங்காயங்களுடன் ஆபத்தான நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நெலுக்குளம் பொலிஸ் காவல் நிலையத்தில் பணியாற்றும் கான்ஸ்டபிள் அபேசிங்க என்பவரே காயமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் கடந்த வியாழனன்று பூச்செடிகளுக்கு நீரூற்றும்போது நிகழ்ந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### இலக்கத்தகடு விநியோகம்

(தொல்புரம்)

1993ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டிகளிற்குரிய இலக்கத்தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இத்தகடுகளை சுழிபுரம் பிரதேச சபையின், வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை, சுழிபுரம் உப அலுவலகங்களில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (41)

## மூன்று நாள் கண்காட்சி நேற்று ஆரம்பம்

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்தமருத்துவக் கண்காட்சி நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இம் மூன்றுநாள் கண்காட்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வைபவ ரீதியாக மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படும் இக் கண்காட்சிக்கு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத் தலைவர் திரு வை செகராசசிங்கம் தலைமை தாங்கினார். யாழ்மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. பாலன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். திரு. பொன் சுந்தரலிங்கத்தின் தமிழ்த் தாய் வணக்கப் பாடலைத் தொடர்ந்து யாழ். மாநகர சபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம், யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம், கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம், திரு இ. ஜெயராஜ், கூட்டுறவு விரிவாக்க உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (சி). (24)

### நலன்புரிச்சங்கத்திற்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரசவப் பெண்கள் மற்றும் நோயாளர்களை தூர இடங்களிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவர உந்து இழுவை வண்டி ஒன்றை மகளிர் அபிவிருத்தி நிலையம் வழங்க முன்வந்துள்ளது. இந்த இழுவை வண்டி யாழ் ஆஸ்பத்திரியின் நலன்புரிச் சங்கத்திடம் வழங்கப்படும்.

அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள இந்த இழுவை வண்டியினை உபயோகிக்க பிரசவ தாய்மார்கள். பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது

### மொகைதீனை

ஆலோசகர் பி.எம்.பி மொகைதீனுடன் தொடர்பு கொண்டு அவருடைய பலவீனத்தைப் பயன்படுத்தி மது, பெண்கள் என்பவற்றை அவருக்குவழங்கியதன் மூலம் முகைதீனுடன் நெருக்கமானார் எனவும ஆபினும் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் வீரகுமார் அல்லது பாபு என்பவர் மது. பெண்கள் விடயத்தில் தான் விலகியே இருந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

மொகைதீனுடனானநெருக்கமான உறவின் மூலமே அவரால் சுசரித்த இல்லத்திற்கு நுழைய முடிந்தது. இதன் மூலம் மொகைதீன் தனது

### உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை மூன்று மணிக்கு புத்தூர் வீனஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும். முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக பிரிவு விளையாடும்.

## உணவு விநியோகம் குறித்த ஆலோசனைக் கூட்டம்

மாவட்ட உணவு விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று நாளை மறுதினம் திங்கள் காலை 10-00 மணிக்கு யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு சகல உதவி அரசாங்க அதிபர்களையும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## துருக்கி அகதிகள் கொலை; 3 ஜேர்மனியர் கைது

(பேர்லின்)

கடந்த வாரம் ஜேர்மனியில் 5 துருக்கிய அகதிகளை வீட்டுடன் எரித்துக் கொன்ற சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று ஜேர்மனிய இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பதினாறு வயது, பத்தொன்பது வயது. இருபத்திமூன்று வயதுடைய மூன்று இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களில் 16 வயதுடைய பாடசாலை சிறுவன், கொல்லப்பட்ட துருக்கிய அகதிகள் வசித்த அதே வீதியிலேயே வாழ்ந்து வந்ததாகவும் இவரின் தாயார் ஒரு தீவிர நாஸி வலதுசாரி என்றும் தெரிவிக்கப்படுகின்றது

இக்கொலை தொடர்பாக ஏற்கனவே ஒரு ஜேர்மனிய இளைஞர் கைதாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### மேல்மாகாண

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தொகுதியான பியகமவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விபற்றி குறிப்பிட்ட அமைச்சர் சிறிசேனகூரே இது ரணிலுக்கு ஏற்பட்ட பாரிய தோல்வியாகக் கருதப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

இதேவேளை சிறிசேன கூரேயின் இக் கூற்றுப்பற்றி பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா கவலை தெரிவித்துள்ளதாகவும், இச்சம்பவம் கூரே-ரணில் முரண்பாட்டை வெளிப்படுத்தும் சம்பவமாக அமைந்துள்ளதாகவும் 'யுக்திய' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### முன்னேறிவந்த

கணைத் தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

### வெளிநாட்டு

சமாதானத்துக்கான நல்லெண்ணத்தைத் தூண்டும் பணியில் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தூதுக்குழுவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது, கொழும்பைச்சேர்ந்த வண ஆனந்த பர்னாண்டோ. வண. ஒஸ்வோல்ற்பேர்த்தை மற்றும் திரு. ஜோ. வில்லியம் ஆகியோரும் அவர்களுடன் இணைந்து கொள்ள உள்ளனர்.

இந். நல்லெண்ணத் தூதுக் குழுவினர் இம்மாதம் 7ஆம் திகதிக்கும், 14ஆம் திகதிக்கும் இடையில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். யாழ். வரும் இத் தூதுக்குழுவினர் சமாதான சூழ்நிலையொன்றை உருவாக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## உள்வந்த வெளிச்சென்ற

வழமையான நுரையீரலக
ளாக அவர் பொருத்தியிருப்
பது சாதனையாக கருதப்படு

...சாதமாக இருக்கும் என அந்த
டாக்டர் தெரிவித்தார்.


## அரியாலை அமரகலா சனசமூக நிலையம்

## 44வது ஆண்டு நிறைவு விழா

இடம் : அரியாலை மத்திய விளையாட்டரங்கு
காலம் : 5-6-93 சனிக்கிழமை (இன்று) 7.00 மணி

நிலைய உறுப்பினர்கள் வழங்கும்
"ஓலமிடும் சீதனங்கள்" எனும் தாளலயம்
பரத நாட்டியம், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுடன்
சிறப்பு நிகழ்ச்சி: V. V. வைரமுத்துவின்
வசந்தகான சபாவினர் வழங்கும்
"சத்தியவான் சாவித்திரி"
நிலைய மாணவிகள் வழங்கும்
"அரிச்சந்திரா மயான காண்டம்"

(சி6772) — நிர்வாகிகள்.



## நாங்கள் உங்களை அண்மித்துவிட்டோம்

உங்களுக்குத் தாமதம் இன்றி உடனடிச் சேவையை வழங்கவும் மேலும் சிறந்த சேவையை அளிக்கும் முகமாகவும், பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுதலிற்கு இணங்கவும் நாங்கள் கந்தர்மடத்திலிருந்து இல. 7, குமாரசாமி வீதி, செந்தாமரையில் எங்களது தரமான, சுவையான உணவுப் பார்சல்களை வழங்க-

**ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா** தீர்மானித்துள்ளது.

உங்களது TAKE AWAY பார்சல்கள் மற்றும் ஓடர்களுக்கும் மேலே குறிப்பிட்ட முகவரை நாடுங்கள்.

உணவுப்பார்சல்களை முற்பகல் 11 30 மணிமுதல் பிற்பகல் 3 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

★ பதிவுகள் முன்கூட்டியே ஏற்கப்படும்.

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா (சி-6750)



## சாவகச்சேரி

## தெய்வேந்திரா திரை அரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

## முதலாவதுவெற்றிப்படைப்பு "தமிழோசை"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30, மாலை 4 மணி, 6 மணி

(சி6720)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்லூரி மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

### அபிவிருத்தி கருத்தரங்கு

வல்வை புனரமைப்பு குழுவினரின் வல்வை நகரசபை பிரதேச அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய் காலை 10 மணிக்கு வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

### சுகாதார வார நடவடிக்கை

சுகாதார வார நடவடிக்கைகள் யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் இன்று சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ளது ஆரம்ப நாளான இன்று நகர்ப்புற சுகாதார தொண்டர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட எழுச்சி விழா யாழ், வைத்தீஸ்வராக் கல்லூரியில் மாலை 3 மணிக்கு நடைபெறும்.

### 14 ஆம் திகதி முதலாவது அமர்வு

கணித பாடத்தில் மாணவர்களிற்கான விசேட செய்திட்டத்திற்கான முதலாவது அமர்வு எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யா/கோப்பாய் ம. வித்தியாலயத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்த சகல மாணவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்படுகின்றனர்.


ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்

**உணவுப் பார்சல்கள்**

காலை 11.30 மணி முதல்
பகல் 3.00 மணி வரை
கிடைக்கும்.

மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை
எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**
சுண்டுக்குளிமகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி
(சி-6718)


யங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்படும் இக் கண்காட்சிக்கு யாழ் மாவட்ட சனசமூக

### நலன்புரிச்சங்கத்திற்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரசவப் பெண்கள் மற்றும் நோயாளர்களை தூர இடங்களிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவர உந்து இழுவை வண்டி ஒன்றை மகளிர் அபிவிருத்தி நிலையம் வழங்க முன்வந்துள்ளது. இந்த இழுவை வண்டி யாழ் ஆஸ்பத்திரியின் நலன்புரிச் சங்கத்திடம் வழங்கப்படும்.

அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள இந்த இழுவை வண்டியினை உபயோகிக்க பிரசவ தாய்மார்கள். பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது

### விளையாட்டு போட்டி

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் ஆதரவுடன் இயங்கும் பாலர் பாடசாலைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி சிறுவர்களுக்கான போட்டிகள் நாளைஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய தீசன் பாலர் பாடசாலையில் நிலையத் தலைவர் த.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது

(41)

---

**புதிய**

பிக்கப்படவுள்ளது.

இக் கட்சியில் பிரேமதாசாவின் சகாக்களாகச் செயற்பட்டவர்கள், ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவினால் பழிவாங்கப்பட்டவர்கள் என்போர் இணையலாம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

திருமதி ஹேமா பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சியினூடாக பாராளுமன்ற உறுப்பினராக்க முயன்றதும், அது கைகூடாமற் போனதும் தெரிந்ததே. தான் தனது கணவர் பிரேமதாசாவின் பணியைத் தொடரப்போவதாக ஹேமா பிரேமதாசா உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஹேமாவின் இப்புதிய கட்சிக்குத் தேவையான அளவு நிதியை வழங்க கொழும்பின் பிரபல வர்த்தகர்களும், சூதாட்டக்காரர்களும் முன்வந்திருப்பதாக அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

---

**ஆண்டுதோறும்**

இதனை ஒட்டியே மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டது.

இதேவேளை பாடசாலை மாணவர்களே புகை பிடித்தலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

ளர் திரு. தி. சபாரத்தினம் கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர், (சி), (24)

---

**மொகைதீனை**

ஆலோசகர் பி.எம்.பி மொகைதீனுடன் தொடர்பு கொண்டு அவருடைய பலவீனத்தைப் பயன்படுத்தி மது, பெண்கள் என்பவற்றை அவருக்குவழங்கியதன் மூலம் முகைதீனுடன் நெருக்கமானார் எனவும ஆயினும் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் வீரகுமார் அல்லது பாபு என்பவர் மது, பெண்கள் விடயத்தில் தான் விலகியே இருந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

மொகைதீனுடனானநெருக்கமான உறவின் மூலமே அவரால் சுசரித்த இல்லத்திற்கு நுழைய முடிந்தது. இதன் மூலம் மொகைதீன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வீரகுமார் பிரேமதாசாவுடன் ஐந்துமுறை சுற்றுப் பயணம் செய்யவும் அனுமதி பெற்றுக் கொடுத்துள்ளார்.

பிரேமதாசா கொல்லப்பட்ட தினத்தன்று மொகைதீனின் நடவடிக்கையே கொலை செய்ததாக சந்தேகிக்கப் படுபவர் பாதுகாப்பு வளையத்தினுள் புகுவதற்கு துணையாக இருந்தது எனவும் குறிப்பிட்டார்.

---

**மாவட்டம்**

மாவட்டத் தளபதி அன்பு அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்கவுள்ளார்.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மகளிர் அமைப்பு துணைப்பொறுப்பாளர் செல்வி தமிழவள், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், தென்மராட்சி தளபதி பரணி ஆகியோர் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியாக விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினர் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

---

**விண்ணப்**

என க பொ, த. உயர்தரப் பாடசாலைகளுக்கு யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

---

**போலி**

வந்ததைக் குறிப்பிட்ட ஆசிரியர் குழுவினர் இது அரசாங்கத்தின் சதி எனத் தெரிவித்தனர்.

---

**மாத**

களுக்கும் எதிராக எதிரணியினர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் நடாத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முடிவு செய்தது.

---

கமவில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விபற்றி குறிப்பிட்ட அமைச்சர் சிறிசேனகூரே இது ரணிலுக்கு ஏற்பட்ட பாரிய தோல்வியாகக் கருதப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

இதேவேளை சிறிசேன கூரேயின் இக் கூற்றுப்பற்றி பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா கவலை தெரிவித்துள்ளதாகவும், இச்சம்பவம் கூரே-ரணில் முரண்பாட்டை வெளிப்படுத்தும் சம்பவமாக அமைந்துள்ளதாகவும் 'யுக்திய' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

---

**முன்னேறிவந்த**

கணைத் தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

---

விஜயத்தின் போது, கொழும்பைச்சேர்ந்த வண ஆனந்தா பர்னாண்டோ, வண. ஓஸ்வோல்ற்பேர்த்தை மற்றும் திரு. ஜோ. வில்லியம் ஆகியோரும் அவர்களுடன் இணைந்து கொள்ள உள்ளனர்.

இந் நல்லெண்ணத் தூதுக் குழுவினர் இம்மாதம் 7ஆம் திகதிக்கும், 14ஆம் திகதிக்கும் இடையில் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். யாழ். வரும் இத் தூதுக்குழுவினர் சமாதான சூழ்நிலையொன்றை உருவாக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 04-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9648


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9175, 26-1583, 24-6944, 26-6983, 24-5955, 24-6336, 26-1735, 42-3267, 27-4289, 24-4361, 27-5197, 26-3582, 28-6996, 27-8879, 27-9492, 22-8835, 26-2366, 26-2654, 26-[illegible]145.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
இல்லை.

---

## 4ஆம் ஆண்டு நினைவுகூருகிறோம்



வீரஜனனம்
14-08-1967

வீரச்சாவு
05-06 1989

## கப்டன் நேரு

(இளையப்பா ஜீவகுமார்)

எழில் வீசும் இளமையில்
மகிழ்ச்சியை தேடி அரவணைக்க வேண்டிய - நீ
மரணத்துடன் கைகுலுக்க துணிந்து விட்டாயே
உனக்கு மரணமில்லை - நேரு நீ
கடல்கடந்து மலை கடந்து - தரை கடந்து
எங்கெல்லாம் விடுதலைக்காக உதிரம் சிந்தினாயே
நேரு நீ ஜீவிக்கின்றாய் - அங்கெல்லாம்
உன் சகோதரர்கள், நண்பர்கள் - வாழ்கின்றார்கள்
நீ மரணிக்க வில்லை - எங்களுடனே வாழ்கின்றாய்
வாழ்ந்து கொண்டு இருக்கின்றாய்

உன்பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, சகோதரன்,
உற்றார். உறவினர்கள்,
நண்பர்கள்.

கதிரிப்பாய்
அச்சுவேலி.

(5038)